[1994 ஏப்ரல் 30

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் உணவுப் பொருள் கொண்டு செல்வதில் இருக்கிற இடையூறு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரதாஸ் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் உணவுப் பொருள் கொண்டு செல்வதில் இருக்கிற இடையூறு பற்றிய ஒரு பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று என்னுடைய அனுமதியைக் கோரி உள்ளார். நான் அவருக்கு அனுமதிவழங்கியுள்ளேன். அந்தப் பிரச்சினையைச் சுருக்கமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்திய நாட்டிலே ஒரே 'ஃபுட் ஜோனாக, சிங்கிள் ஃபுட் ஜோனாக' இருக்கிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும், எங்கே பார்த்தாலும் செக் போஸ்ட் போட்டு அரிசி கொண்டு போக முடியாத நிலைமை இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் போல கோயம்புத்தூர் மாவட்டம் இருக்கிறது, மதுரை மாவட்டம் இருக்கிறது. இவை கேரள எல்லை பகுதியில் இருக்கின்றன. ஆனால் அங்கேயெல்லாம் இந்தப் பிரச்சினை இல்லை. ஆனால் எங்களுடைய நேஷனல் ஹைவேஸ் நாகர்கோயில்-திருவனந்தபுரத்திற்கு இடையே 3 செக் போஸ்ட் இருக்கின்றன. சுங்கான்கடை, குழித்துறை, களியக்காவிளை, அதைப் போல என்னுடைய தொகுதியில் பார்த்தால் 30 செக் போஸ்ட். எங்கே பார்த்தாலும் செக் போஸ்ட். கேட்டால் லெவி செக் போஸ்ட் என்று சொல்கிறார்கள். எதற்கு வைத்தார்கள் என்று எங்களுக்கே தெரியாது. செக் போஸ்ட் போட்டு அங்கே அரிசி கொண்டு போக முடியாத நிலை. அரிசி விலை அதிகமாக ஏறிக்கொண்டே இருக்கிறது. இப்போது புதிய டங்கல் திட்டத்தின்படி தஞ்சாவூரில் விவசாயம் செய்கிற விவசாயிக்கு அமெரிக்காவில் அரிசி விற்க அதிகாரம் இருக்கிறது. ஆனால் இங்கே நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்கிற பொருள்களை நம்முடைய மாநிலத்தில் கொண்டு போக முடியாது. நம்முடைய ஸ்டேட்டுக்குள்ளேயே கொண்டு போக முடியாது என்று சொன்னால், மிகவும் சங்கடமான நிலை. ஏனென்றால் கேரளாவிலிருந்து ஒரு சில வரைட்டிஸ் அரிசி இங்கே வருகிறது. ஆனால் நம்முடைய அரிசியை, எங்கள் மாவட்டத்தில்—விளவன்கோடு தாலுக்கா பார்டர் என்று வைத்துக் கொள்வோம். கல்குளம் தாலுக்கா பார்டர் இல்லை. சுங்கான்கடை தாண்டி தான் கல்குளம் தாலுக்கா வருகிறது. அதற்குள்ளேயே செக் போஸ்ட். அதிகாரிகள் சொல்லக் கூடும், எல்லா அரிசியையும் கேரளாவுக்கு கொண்டு போய்

விடுவார்கள் என்று. என்னுடைய தொகுதி கேரளா பார்டரில் இருக்கிறது. ஆனால் கல்குளம் தாலுக்கா என்று சொல்வது. நாகர்கோயிலுக்குள்ளே அங்கே செக்போஸ்ட். இது தேவையா? சுங்கான்கடை என்று சொல்வது நாகர்கோயில் லிமிட்டிற்குள்ளே. அங்கே பெரிய செக் போஸ்ட் வைத்திருக்கிறார்கள். இதனால் அரிசியை—எங்கேயும் கொண்டு போக முடியாத நிலை இருக்கிறது.

மேலும் அரிசி விற்க வேண்டுமென்று லைசென்ஸ் வேண்டுமென்றால், யாருக்கும் அந்த லைசென்சே கொடுப்பதில்லை. ஆனால் எல்லா மாவட்டத்திலும் லைசென்ஸ் கொடுக்கிறார்கள். நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டால், கொடுக்கக்கூடாது, அரிசி விற்பது ஹோல்சேலாக தேவையில்லை என்கிறார்கள். தேவைப்பட்டு கேட்டாலும் கொடுப்பதில்லை. ஆகவே, அரிசியை அந்த அளவுக்கு நேரடியாகக் கொண்டு போக முடியாது, செக் போஸ்ட் இருக்கிறது. லைசென்ஸ் வழங்கி அரிசி கொடுக்கச் சொன்னால் லைசென்ஸ் கொடுப்பதே இல்லை. சென்ற 3, 4 வருடங்களாக லைசென்சே இல்லை. ஆகவே, இது எந்த மாவட்டத்திலும் இல்லாத ஒரு பிரச்சினையாக எங்கள் மாவட்டத்தில் இருக்கிறது. நான் என்ன நினைக்கிறேன் என்றால், அதிகாரிகள், ரெவின்யூ ,ஸ்டாப் அவர்களுடைய புரமோஷனுக்காகச் செய்தார்கள் என்று கூட சொல்லிக் கொண்டிருந்தார்கள். அங்கே இருக்கிற அதிகாரிகளை மாவட்ட கலெக்டரே செக் போஸ்டிலே போட்டு, அங்கே டெபுடி தாசில்தார், தாசில்தாரைப் போட்டு நடத்திக் கொண்டிருக்கலாம். தயவுசெய்து என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், எல்லா மாவட்டத்தையும் போல எங்கள் மாவட்டத்திலும், அரிசி கொண்டு போக அனுமதி வழங்க வேண்டும். அரிசி விற்பதற்கான லைசென்ஸ் கேட்டால் கொடுக்க வேண்டும். கடைக்காரர்கள் லைசென்ஸ் கேட்டாலும் லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அந்த அளவுக்கு எங்களுடைய மாவட்டத்தில், எல்லா இடங்களிலும், அரிசி மக்களுக்கு கிடைக்கிற வகையில் செய்வதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு அமைச்சர்.

* மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.சுந்தரதாஸ் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்திரம் அரசாங்கம் சில கடுமையான நிபந்தனைகளை விதித்து, சாவடிகளை எல்லாம் வைத்து பொது மக்களுடைய அரிசி கொண்டு செல்கிற, நெல் கொண்டு செல்கிற போக்குவரத்தைத் தடை செய்கிறார்கள், அதனால் பொது மக்களுக்குப் பாதகம் விளைகிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

[திரு. இராம வீரப்பன்] [1994 ஏப்ரல் 30

நான் முதலில் அதைத் திட்டவட்டமாக மறுக்க விரும்புகிறேன். பொது மக்களுக்கு எந்தப் பாதகமும் இதனால் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியா முழுவதும் ஒரே உணவு மண்டலமாக இருக்கிறது, ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மாத்திரம் ஏன் இந்த கட்டுப்பாடு என்று அவர்கள் கேட்டார்கள். அதிலேயும் அவர் தன்னுடைய கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தியா முழுவதும் ஒரே உணவு மண்டலம் என்று அறிவித்திருந்தாலும், ஆங்காங்கே சில மாநில அரசுகள் தங்களுடைய மக்களுடைய நலனை முன்னிட்டு, தங்களுடைய மக்களுடைய தேவைகளைக் கருத்திற்கொண்டு, சில நெறிமுறைகளை, கட்டுப்பாடுகளை விதித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். மிக அதிகமாக நெல் விளைகிற ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு அவ்வளவு சுலபமாக நெல்லோ அரிசியோ வர முடியாது. ஆந்திர அரசும் சில கட்டுப்பாடுகளை விதித்து, அவர்கள் அனுமதித்தால்தான் தமிழகத்திற்கு நெல்லோ அரிசியோ வர இயலும். முற்பகல் 11.35

தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஒரு பற்றாக்குறை மாநிலம், இப்போதுதான், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு மிகச் சிறந்த முயற்சிகளை, விஞ்ஞான அடிப்படையிலே ஆய்வுகளை எல்லாம் மேற்கொண்டு, நம்முடைய வேளாண்மைத்துறை மிகப் பெரிய முன்னேற்றத்தைக் கண்டுகொண்டு, விளைச்சலை அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறது. இயற்கையும் ஒத்துழைத்துக் கொண்டிருக்கிறது. என்றாலும் இன்னும் நம்முடைய தேவைக்குப் போதுமான நெல்லை, நாம் பெற முடியாமல்தான் இருக்கிறோம். ஆகவே, தமிழ்நாட்டு மக்களுக்கு அரிசி எவ்வளவு தேவையோ, அதைப் பாதுகாத்து, சேமித்து, சேகரித்துக் கொடுக்கவேண்டிய கடமையும் கட்டாயமும் நம்முடைய அரசுக்கு இருக்கிறது. அதேநேரத்தில், இங்கே உற்பத்தியாகிற நெல்லோ, அரிசியோ, பக்கத்திலே அதிகமாக தேவைப்படுகிற கேரள மாநிலத்திற்கு நாம் அனுப்பிவிட்டால், இங்கே விலை உயர்ந்துவிடும். நம்முடைய அரசுக்கு இருக்கிற மிகச் சிறந்த பெருமையும், வெற்றியும், இந்த உணவுப் பொருட்களுடைய விலையைக் கட்டுப்படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதுதான். அதுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கிடைத்து இருக்கிற மாபெரும் வெற்றியாகும்.

ஆகவேதான், சென்ற ஆண்டிலேகூட, மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்குப் பிறகு, யாருமே துணிந்து எடுக்க முடியாத ஒரு முடிவை அவர்கள்

மேற்கொண்டு, தமிழகத்திற்கு உள்ளே இந்த நெல், அரிசி, போக்குவரத்துக்கு இருந்த கட்டுப்பாடுகளை எல்லாம் தளர்த்தி, எந்த மாவட்டத்திற்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாம் என்ற மிகப் புரட்சிகரமான ஒரு திட்டத்தை அறிவித்து, அதிலேயும் இன்றைக்கு வெற்றியைக் கண்டு இருக்கிறோம். ஆகவே, இவ்வளவு வெற்றியைப் பெற்றுக்கொண்டிருக்கிற சூழ்நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்திலே மாத்திரம் ஏன் இந்தக் கட்டுப்பாடுகளை ஓரளவிற்கு வைத்திருக்கிறோம் என்பதை நான் விளக்க விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருந்து பக்கத்திலிருக்கிற கேரள மாநிலத்திற்கு அதிகமாக, கட்டுப்பாடுகளை மீறிய அளவிலே வியாபாரிகள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக, நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன், பொதுமக்கள் அல்ல - வியாபாரிகள், அவர்கள் இங்கேயிருந்து நெல்லையோ அரிசியையோ கொண்டுபோகிற முயற்சியிலே ஈடுபடுகிறார்கள். ஆகவேதான் தடுக்கிற முயற்சியை நம்முடைய மாநில எல்லையிலே மாத்திரம் வைத்து பாதுகாத்துக் கொண்டிருக்கிறோம்.

அவர்கள் சொல்கிற விளரங்கோடு, கல்குளம் இந்த இரண்டு தாலுக்காக்களில், நம்முடைய கேரள எல்லையையொட்டி விளவங்கோடு இருக்கிறது, அதையொட்டி, கல்குளம் இருக்கிறது. அங்கே மாத்திரம் இந்த கோட்டா சிஸ்டம் வைத்திருக்கிறார்கள். நீண்டநாட்களாக இருந்து வருகிறது. அங்கே மாத்திரம் இந்தச் சில்லரை வியாபாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களாலே வழங்கப்படுகிற இந்த கோட்டாக் கார்டுகளை வைத்து, 5 குவிண்டால் ஒரு நேரத்திலே வாங்கி கொண்டு போகலாம் என்பதற்காகத்தான் அங்கே வைத்திருக்கிறார்கள். இந்த இரண்டு தாலுக்காக்களுக்கு மாத்திரம் தான். அரிசியை இந்த கோட்டா கார்டுகள் மூலம் கொண்டு போகிறார்களா என்பதைப் பரிசோதிப்பதற்குத்தான் இந்த செக்-போஸ்ட்... இன்னும் கூடச் சொல்கிறேன். நாம் ஒன்றும் கேரளாவிற்குப் போவதைத் தடுப்பதுகூட இல்லை. யார் வேண்டுமானாலும் கொண்டு போகலாம். ஆனால் ஆந்திரா என்ன திட்டத்தை வைத்திருக்கிறதோ, அதே திட்டத்தை நாமும் வைத்திருக்கிறோம். அப்படிக் கொண்டு போகிற வியாபாரிகள், அவர்கள் எவ்வளவு நெல்லோ அரிசியோ கொண்டு போகிறார்களோ, அந்த அளவிற்கு அரசாங்கத்திற்கு நம்முடைய விலையிலே லெவியைக் கொடுத்துவிட்டால், அந்த அளவிற்குக் கொண்டு போகலாம். அதிலே ஒன்றும் தடையில்லை. ஆனால், இந்த 2 தாலுக்காக்களிலே மாத்திரம் கொஞ்சம் கண்காணிப்போடு இருக்கவேண்டியிருக்கிறது. ஒரு புள்ளிவிவரத்தைத் தருகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே மொத்தம்

4 தாலுக்காக்கள். இந்த 4 தாலுக்காக்களிலே மொத்த சில்லரை வியாபாரிகள் 1,052 பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த இரண்டு தாலுக்காக்களிலே மாத்திரம் 738 சில்லரை வியாபாரிகள் இருக்கிறார்கள். மக்கள் தொகை மற்ற இரண்டு தாலுக்காக்களிலே தான் அதிகம். இந்த இரண்டு தாலுக்காக்களிலே குறைவு. 70 சதவீதம் சில்லரை வியாபாரிகள் இந்த இரண்டு தாலுக்காக்களிலே இருக்கிறார்கள் என்றால், எதற்காக இருக்கிறார்கள் என்பதை அரசுப் புரிந்துகொண்டுதான் நடவடிக்கையை எடுத்துக் கொண்டு வருகிறது. ஆகவே, இங்கே இருக்கிற நெல்லோ, அரிசியோ, நம்முடைய மக்களுக்குப் போதாமல், பற்றாக்குறையாக இருக்கிறபோது, பக்கத்திலே கொள்ளை லாபம் கருதி கடத்திக் கொண்டு போகிற வியாபாரிகளைத் தடுப்பதற்காகத்தான் இந்த லெவி கட்டுப்பாடு முறையை வைத்திருக்கிறோம்.

முற்பகல் 11.40

அதனாலேதான் லெவி போஸ்ட், செக்போஸ்ட் என்று அதற்குப் பெயர். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கருத்துக்கள் எல்லாம் சென்ற ஆண்டு இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியதற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அவர்கள் இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்டுப்பாட்டினை இப்போது மாநிலம் முழுவதும் தளர்த்தியதற்குப் பிறகு இந்த மாவட்டத்திற்குள்ளே மாத்திரம், இன்னும் கடுமையாக இருக்க வேண்டுமா? அதையும் இன்னும் கொஞ்சம் தளர்த்த முடியுமா? இந்த செக் போஸ்டுகளை எல்லாம் இன்னும் கொஞ்சம் தள்ளி-அங்கே கோதையாறு வருகிறது. அந்தக் கோதையாறைத் தாண்டி அவ்வளவு சுலபமாக போகமுடியாது. பாலம் இருக்கிறது. 4, 5 பாலங்களுக்கு அப்பால் அதிலே நம்முடைய கல்குளம் தாலுக்காகூட விடுபடலாம். விளவங்கோடு தாலுக்கா அதைத் தாண்டியிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிகளிலே மாத்திரம் கொஞ்சம் கடுமையான கண்காணிப்பை வைத்துக்கொண்டு, மற்ற பகுதிகளிலே இதைக் குறைத்துக் கொள்ளமுடியுமா என்பதை ஆராயவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கேட்டிருக்கிறார்கள். உத்தரவிட்டிருக்கிறார்கள். அதைத் துறை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், யாரும் மாநிலம் முழுவதும் அரிசி வியாபாரம் செய்வதற்கு உரிமம் பெற்றுத்தான் ஆகவேண்டும். சில்லரை வியாபாரியோ, மொத்த வியாபாரியோ உரிமம் பெற்றுத்தான் ஆகவேண்டும். அந்த முறைதான் இங்கே இருக்கிறது. இங்கு சிறப்பான சூழ்நிலையைக்

1994 ஏப்ரல் 30] [திரு. இராம வீரப்பன்]

கருதி, நாம் கட்டுப்பாட்டினை கொஞ்சம் அதிகமாக வைத்துக்கொண்டிருக்கிறோம். அதைத் தளர்த்தி நியாயமான வியாபாரிகளுக்கு, தவறு செய்யாத வியாபாரிகளுக்கு, சங்கடங்கள் வராமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நம்முடைய உணவுத் துறையைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். உரிமம் வழங்குவது 4, 5 ஆண்டுகளாகவே சில்லரை வியாபாரிகளுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு தாலுக்காக்களில் மாத்திரம், 70 சதவீதம் அந்த எல்லையிலே இருக்கிற தாலுக்காவில் இருக்கிறார்கள். மக்கள் குறைவாக உள்ள தாலுக்காக்களில் எதற்கு? அதைத்தான் அரசாங்கம் ஆராய்கிறது. கண்ணை மூடிக்கொண்டு எந்த உத்தரவும் வழங்கிவிட முடியாது. மக்களுக்கு அரிசி கிடைக்கவேண்டும். இன்னும் சொல்லப்போனால் அங்கேயிருந்து சிலவகை அரிசி இங்கே வருகிறது. இங்கேயிருந்து சில வகை அரிசி போகிறது என்கிறீர்கள். சாதாரண மக்கள் வாங்குகிற—நாம் 3 ½ ரூபாய்க்கு கொடுக்கிறோமே, டி.கே.எம். 9, சி.ஆர். 1009 அந்த அரிசிக்குதான் அங்கே கிராக்கி. 5, 7, 8 ரூபாய்க்கு விற்கிற அரிசி அங்கேயிருந்து இங்கே வருகிறது. ஆகவே இந்தச் சாதாரண ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகிற அரிசியை நாம் எங்காவது கண்ணைமூடிக் கொண்டு நீ போ என்று அனுப்பிவிட்டு இங்கேயிருக்கின்ற மக்களுக்கு அந்த அரிசி இல்லை என்று சொல்கிற சூழ்நிலைக்கு அரசாங்கம் தன்னை ஆளாக்கிக் கொள்ளமுடியாது. ஆகவே குமரி மாவட்டத்திலுள்ள மக்களுக்கு எந்த விதமான பாதகமும் வராது. எப்போதும் வரவில்லை. எந்த நெருக்கடியும் இல்லை. அரிசித் தட்டுப்பாடும் இல்லை. மிகத் தாராளமாக அரிசி கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதிகமான அரிசி கிடைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் கஷ்டமென்றால் வியாபாரிகளுக்கு, நல்ல வியாபாரிகளுக்கு, நியாயமான வியாபாரிகளுக்கு அல்ல. இந்த அரிசியை வியாபாரத்தின் பெயராலே கடத்திக்கொண்டு போய் அதிகமான விலைக்கு லாபத்திற்கு விற்கவேண்டுமென்று முயல்கிற வியாபாரிகளுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. காவல் இருந்தால் சிலருக்குக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனாலும் அரசு பரிசீலனை செய்து, இன்னும் இந்தக் கட்டுப்பாட்டினைக் கொஞ்சம் குறைக்கமுடியுமா, தளர்த்தமுடியுமா? மாநிலம் முழுவதும் சுதந்திரமாக ஏற்படுத்திவிட்ட பிறகு, இந்த கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சில்லரை விற்பனைக் கடைகளை அனுமதிக்கமுடியுமா என்பதைப் பரிசீலிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதையும் துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவிலே எந்தச் சங்கடங்களை

குறைக்கமுடியுமோ, நியாயமான வியாபாரிகளுக்கு, அதைக் குறைக்க அரசு முயலும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

3. கவன ஈர்ப்பு

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல், தம்மம்பட்டி பகுதிகளில் ஜவ்வரிசித் தொழிற்சாலைகளின் கழிவுநீர் நதிகளில் கலப்பதால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. கந்தசாமி, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவார். திரு. கே. கந்தசாமி.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தலைவாசல் பகுதிகளில் உள்ள ஜவ்வரிசித் தொழிற்சாலைகளின் கழிவுநீர் வசிஷ்டா நதியிலும், தம்மம்பட்டி பகுதிகளில் உள்ள ஜவ்வரிசி தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுவேதா நதியிலும் கலந்து பொதுமக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகியுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, தலைவாசல் பகுதியில் 10 ஜவ்வரிசி தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. அத்தொழிற்சாலைகள் நாளொன்றுக்கு 153.5 கிலோ லிட்டர் தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியேற்றுகின்றன. இத்தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுநீரானது, அருகிலுள்ள சிறு ஓடையின் வழியாக, சர்வாய் ஏரியை அடைந்து இறுதியில் வசிஷ்டா நதியில் கலக்கின்றது.